# GEAR UP SERIES
# TEST XIII – GENERAL TAMIL – GRAMMAR
# (OLD AND NEW SAMACHEER)

1. பிரித்து எழுதுக: ‘சிற்றிலக்கியம்’
   a. சிறு + இலக்கு + இயம்
   b. சிற்றில் + இயம்
   c. சிறுமை + இலக்கு + இயம்
   d. சிற்று + இல் + இயம்
   e. விடை தெரியவில்லை

2. பிரித்து எழுதுக: ‘செழுங்கனித்தீஞ்சுவை’
   a. செழுமை + கனி + தீஞ்சுவை
   b. செழும் + கனி + தீஞ்சுவை
   c. செழும் + கனி + தீம் + சுவை
   d. செழுமை + கனி + தீம் + சுவை
   e. விடை தெரியவில்லை

3. பிழையில்லா சொற்றொடரைக் காண்:
   a. தாய்மொழி வழிக் கல்வியே மிக சிறந்ததாகும் எனக் கூறினார் மகாத்மா.
   b. தாய்மொழிவழி கல்வியே மிகச் சிறந்ததாகும் எனக் கூறினார் மகாத்மா.
   c. தாய்மொழி வழிக் கல்வியே மிகச் சிறந்ததாகும் எனக் கூறினார் மகாத்மா
   d. தாய்மொழி வழி கல்வியே மிகச் சிறந்ததாகும் என கூறினார் மகாத்மா.
   e. விடை தெரியவில்லை

4. “இன்பத்தமிழ்“ பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக:

   A. விளைவுக்கு — 1. பால்
   B. அறிவுக்கு — 2. வேல்
   C. இளமைக்கு — 3. நீர்
   D. புலவர்க்கு — 4. தோள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

   e. விடை தெரியவில்லை

5. பொருத்துக.

   A. Fanfare — 1. இணக்கமுள்ள
   B. Fangle — 2. வீட்டுப்புறா
   C. Fantail — 3. எக்காள முழக்கம்
   D. Facile — 4. நாகரிகம்

   குறியீடுகள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 1 | 4 | 2 | 3 |

   e. விடை தெரியவில்லை

6. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்
   a. ஐம்பது, ஐயை, ஐவர், ஐயம்.
   b. ஐம்பது, ஐயம், ஐயை, ஐவர்.
   c. ஐயம், ஐவர், ஐயை, ஐம்பது
   d. ஐம்பது, ஐவர், ஐயம், ஐயை.
   e. விடை தெரியவில்லை

7. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்
a. ஔடதம், ஔவியம், பௌவம், கௌதாரி.
b. ஔடதம், ஔவியம், கௌதாரி, பௌவம்.
c. ஔவியம், ஔடதம், கௌதாரி, பௌவம்.
d. ஔவியம், ஔடதம், பௌவம், கௌதாரி.
e. விடை தெரியவில்லை

8. இலக்கணக் குறிப்பறி: தாங்குறூஉம்
a. இசை நிறையளபெடை b. சொல்லிசை-யளபெடை c. இன்னிசையளபெடை
d. செய்யுளிசையளபெடை e. விடை தெரியவில்லை

9. கழுத்தில் சூடுவது ___________.
a. தார் b. கணையாழி c. தண்டை d. மேகலை e. விடை தெரியவில்லை

10. குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி __________ நிலைபெறும்
a. செல்வம் b. புகழ் c. உலகம்
d. பதவி e. விடை தெரியவில்லை
The _______ will constantly embrace the feet of the great king who rules over his subjects with love.
a. Wealth b. Glory c. World
c. Post e. Answer not known

11. தழீஇ
a. செய்யுளிசை அளபெடை b. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
c. இன்னிசை அளபெடை d. சொல்லிசை அளபெடை
e. விடை தெரியவில்லை

12. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு:
'இன்மையுள் இன்மை விருந்தொரால்'
a. வறுமையுள் வறுமை எது? b. இன்மையுள் இன்மை விருந்தொராலா?
c. விருந்தொரால் இன்மையுள் இன்மையா? d. விருந்து என்பதென்ன?
e. விடை தெரியவில்லை

13. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு:
'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை.'
a. கடல் கடந்து செல்லக் கூடாதவர் யார்? b. கடலில் செல்பவர் யார்?
c. முந்நீர் வழக்கம் எது? d. மகடூஉ வின் வழக்கம் என்ன?
e. விடை தெரியவில்லை

14. பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
a. பொன் + கோட்டு b. பொற் + கோட்டு c. பொண் + கோட்டு
d. பொற்கோ + இட்டு e. விடை தெரியவில்லை

15. பட்டியல் I ஐ பட்டியல் II வுடன் பொருத்துக.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. தனிவாக்கியம் | 1. யார் கல்விச் செல்வம் பெறுகிறார்களோ அவர்கள் வாழ்வு வளம் பெறும் |
| B. வினா வாக்கியம் | 2. பாலு கந்தனை வணங்கினான். |
| C. கட்டளை வாக்கியம் | 3. குழந்தைகளுக்கு என்ன தெரியும்? |
| D. கலவை வாக்கியம் | 4. எழுந்து நில். |

குறியீடுகள்:

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

16. பொருத்துக.

A. வெண்பா — 1. துள்ளலோசை
B. ஆசிரியப்பா — 2. தூங்கலோசை
C. கலிப்பா — 3. செப்பலோசை
D. வஞ்சிப்பா — 4. அகவலோசை

குறியீடுகள்:

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

17. "ஒருபொருட் பன்மொழி" இல்லாத சொல் எது?

a. வல்விரைந்து b. பரிசுப் பாராட்டு c. நடுமையம்
d. இவற்றுள் எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

18. ஔடதம் ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது __________.

a. ஔடதமாம் b. ஔடதம் c. ஔடதாம் d. ஔடதஆம் e. விடை தெரியவில்லை

19. பொருத்துக

பட்டியல் I சொல் — பட்டியல் II பொருள்

A. குருசு — 1. முடிவு
B. ஒடுக்கம் — 2. வியப்பு
C. முழவு — 3. சிலுவை
D. இறும்பூது — 4. மத்தளம்

குறியீடுகள்:

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

20. சொல்வன்மை அதிகார எண் __________

a. 63 b. 64 c. 65 d. 66 e. விடை தெரியவில்லை

Power of speech under comes ________ chapter

a. 63 b. 64 c. 65 d. 66 e. Answer not known

21. கீழ்க்கண்டவற்றுள் பொதுமொழி அல்லாதது எது?

a. தாமரை b. அந்தமான் c. மன்னவன் d. பலகை e. விடை தெரியவில்லை

22. பொருந்தாதது எது?

a. வையகம் எழுந்தது - இடவாகுபெயர்
b. விருந்து உண்டான் - பண்பாகுபெயர்
c. கார் அறுத்தான் - காலவாகுபெயர்
d. முல்லை சூடினாள் - சினையாகுபெயர்
e. விடை தெரியவில்லை

23. எதிர்ச்சொற்களைப் பொருத்துக:

A. அணுகு — 1.தெளிவு
B. ஊக்கம் — 2. பொய்ம்மை
C. ஐயம் — 3. சோர்வு
D. உண்மை — 4. விலகு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

24. குடிப்பெயர் எது?
a. ஓதுவான் b. எயினை c. பொன்னன்
d. நல்லன் e. விடை தெரியவில்லை

25. "கம்பனைக் கற்றேன்" – எவ்வகை ஆகுபெயர்.
a. கருத்தாவாகுபெயர் b. கருவியாகுபெயர் c. காரியவாகு பெயர்
d. உவமையாகுபெயர் e. விடை தெரியவில்லை

26. முற்றியலுகரம் எது?
a. சுக்கு b. பண்பாடு c. கொடு
d. கோபு e. விடை தெரியவில்லை

27. தவறானது எது?
a. வாழ்வியலுக்கான இலக்கணம் - பொருளிலக்கணம்
b. செய்யுள் உருவாக்குவதற்கான இலக்கணம் - யாப்பிலக்கணம்
c. எழுத்தின் வகை மற்றும் பிறப்பைக் கூறும் இலக்கணம் - எழுத்திலக்கணம்
d. செய்யுளை அழகுபடுத்துவதற்கான இலக்கணம் - சொல்லிலக்கணம்
e. விடை தெரியவில்லை

28. கலைக்கூடமாகக் காட்சி தருவது _________.
a. சிற்பக்கூடம் b. ஓவியக்கூடம் c. பள்ளிக்கூடம்
d. சிறைக்கூடம் e. விடை தெரியவில்லை

29. இடைப்போலி - எது?
a. அரைசன் b. கலன் c. மையல்
d. அஞ்சு e. விடை தெரியவில்லை

30. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது ________ ________
a. மன்னனுடைய வீரம் b. மன்னனுடைய ஈகை
c. மன்னனுடைய ஆட்சி d. மன்னனுடைய செங்கோல்
e. விடை தெரியவில்லை
Learning and virtue of the sages spring,
From all-controlling _______
a. King's valour b. King's generosity
c. King's Rule d. sceptre of the king
e. Answer not known

31. வினைத்தொகை அல்லாதது எது?
a. ஒழுகுநீர் b. ஆரமிர்து c. உறைபனி
d. புனைமலர் e. விடை தெரியவில்லை

32. பொருத்துக:
A. ஐகாரக்குறுக்கம் 1. மு.்.டீது
B. ஔகாரக்குறுக்கம் 2. தலைவன்
C. ஆய்தக்குறுக்கம் 3. போன்ம்
D. மகரக்குறுக்கம் 4. வௌவால்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

33. வழு எத்தனை வகைப்படும்
a. 2 b. 4 c. 6 d. 7 e. விடை தெரியவில்லை

34. உவமையால் விளக்கப்படும் பொருள் - நுணலும் தன் வாயால்கெடும்
a. பயனின்மை b. உலகில் நடக்காத செயல் c. தன் செயலால் தீமை
d. செயலறிந்து செய்தல் e. விடை தெரியவில்லை

35. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக?
a. உறுதிகள் உளவோ உழைப்பின் வாரா? b. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
c. உளவோ உழைப்பின் உறுதிகள் வாரா? d. வாரா உழைப்பின் உறுதிகள் உளவோ?
e. விடை தெரியவில்லை

36. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ___________.
a. ஐகாரக் குறுக்கம் b. ஔகாரக் குறுக்கம் c. மகரக்குறுக்கம்
d. ஆய்தக்குறுக்கம் e. விடை தெரியவில்லை

37. பொருந்தாதது எது?
a. இடங்கர் - முதலை b. சலதி – கடல் c. கந்தகம் - கப்பல்
d. பொதும்பர் - சோலை e. விடை தெரியவில்லை

38. சரியானது எது?

| பெரும்பொழுதுகள் | | காலம் |
|---|---|---|
| a. கார்காலம் | - | ஆவணி, புரட்டாசி |
| b. முன்பனி | - | மாசி, பங்குனி |
| c. முதுவேனில் | - | சித்திரை, வைகாசி |
| d. குளிர்காலம் | - | ஆனி, ஆடி |

e. விடை தெரியவில்லை

39. மயில் - எந்நிலங்களுக்குறிய பறவை?
a. மருதம், முல்லை b. முல்லை, நெய்தல் c. குறிஞ்சி, முல்லை
d.மருதம், நெய்தல் e. விடை தெரியவில்லை

40. பொருத்துக

| | |
|---|---|
| A. ஒறுத்தல் | 1. பழி |
| B. வடு | 2. செலுத்துதல் |
| C. ஓர்தல் | 3. கடிதல் |
| D. ஓச்சுதல் | 4. ஆராய்தல் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 4 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

Match the following

| | |
|---|---|
| A. ஒறுத்தல் | 1. Blame |
| B. வடு | 2. Giving |
| C. ஓர்தல் | 3. Angry |
| D. ஓச்சுதல் | 4. Examine |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| d. | 4 | 3 | 1 | 2 |

e. Answer not known

41. "யாண்டு" என்னும் சொல்லின் பொருள் __________.
a. எனது b. எங்கு c. எவ்வளவு d. எது e. விடை தெரியவில்லை

42. பாடாண் திணை – எதைப் பற்றியது?
a. முதுகுடி பெண்ணின் வீரம் b. குடிப்பிறப்பின் சிறப்பு c. பெண்களின் ஒழுகலாறு
d. ஆண்மகனின் ஒழுகலாறு e. விடை தெரியவில்லை

43. கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும் - அடி மோனையை குறிப்பிடுக.
a. கனி – சுளை b. கனி – ஏறிய c. கனியிடை – கழையிடை
d. சாறும் - கனி e. விடை தெரியவில்லை

44. ''கற்பனை வளர்தல் வேண்டும் கவிநயம் பிறத்தல் வேண்டும்'' – என்னும் இப்பாடலின் அடி?
a. நேரடி b. கழிநெடிலடி c. சிந்தடி
d. நெடிலடி e. விடை தெரியவில்லை

45. தூண் என்னும் பொருள் தரும் சொல் ___________.
a. ஞெகிழி b. சென்னி c. ஏணி d. மதலை e. விடை தெரியவில்லை

46. ''புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது
இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது'' - இப்பாடலடியில் இடம்பெறாதது எது?
a. அடிமுரண் b. அடியெதுகை c. ஒரூஉ மோனை
d. அடி இயைபு e. விடை தெரியவில்லை

47. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக:
'தமிழக அரசு சிறந்த கலைஞர்களைக் கௌரவிக்கிறது'
a. செயப்பாட்டு வாக்கியம் b. தொடர் வாக்கியம் c. கலவை வாக்கியம்
d. செய்வினை வாக்கியம் e. விடை தெரியவில்லை

48. ''நெற்பயிர் உழவனால் வளர்க்கப்பட்டது'' எவ்வகை வாக்கியம்?
a. செய்வினை b. செயப்பாட்டு வினை c. பிறவினை
d. விழைவு வாக்கியம் e. விடை தெரியவில்லை

49. பொருத்துக:
A. இயற்சொல் 1. பெற்றம்
B. திரிசொல் 2. இரத்தம்
C. திசைச்சொல் 3. அழுவம்
D. வடசொல் 4. சோறு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 4 | 3 | 2 |
| d. | 4 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

50. வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.
இக்குறளில் உள்ள ''வான்'' என்பது _________ ஐக் குறிக்கிறது
a. வானம் b. விண்ணுலகு c. மழை
d. தேவருலகு e. விடை தெரியவில்லை

vaanoakki vaazhum ulakellaam mannavan
koalnhoakki vaazhunG kuti
In this Kural the term Vaan means
a. Sky b. heavenly bodies c. Rain
d. The world of god e. Answer not known

51. தவறான வினைமரபுச் சொற்களைக் கண்டறிக.
I. காய்கறி அரிந்தாள் II. பழம் உண்டான்
III. பாட்டுப் பாடினான் IV. மலர் பறித்தாள்
a. I, II மட்டும் தவறு b. II, III மட்டும் தவறு c. II, IV மட்டும் தவறு
d. IV மட்டும் தவறு e. விடை தெரியவில்லை

52. நேரசை, நிரையசை இரண்டிற்கும் பொருந்தாதது எது?
a. குறில், மெய் இணைந்து வருவது b. நெடில், மெய் இணைந்து வருவது
c. குறில், நெடில் இணைந்து வருவது d. நெடில், குறில் இணைந்து வருவது
e. விடை தெரியவில்லை

53. பின்வரும் வெண்பாவின் ஈற்றுச்சீரை (ஓரசைச்சீர்) அவற்றின் வாய்ப்பாடுடன் பொருத்துக.
A. நாடு 1. நாள்
B. என் 2. மலர்
C. உலகு 3. காசு
D. படும் 4. பிறப்பு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

54. பொருத்துக:
A. கழனி 1. கதிரவன்
B. நிகர் 2. மேகம்
C. பரிதி 3. சமம்
D. முகில் 4. வயல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 4 | 3 | 2 |
| d. | 4 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

55. பின்வருனவற்றுள் இயற்சீர் என்று அழைக்கப்படுவது எது?
a. வெண்பா உரிச்சீர் b. வஞ்சியுரிச்சீர் c. பொதுச்சீர்
d. ஆசிரிய உரிச்சீர் e. விடை தெரியவில்லை

56. அவியுணவு - இலக்கணக் குறிப்பு தருக.
a. வினைத்தொகை b. பண்புத்தொகை c. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
d. உயர்வுச் சிறப்பும்மை e. விடை தெரியவில்லை

57. பொருத்துக:
A. தளை 1. 8
B. பொருள்கோள் 2. 6
C. பெயர்ச்சொல் 3. 16
D. ஆகுபெயர் 4. 7

|  | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

58. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை ___________.

a. 40 b. 42 c. 44 d. 46 e. விடை தெரியவில்லை

59. பொருத்துக:

A. உண்ட கந்தன் — 1. குறிப்புப் பெயரெச்சம்
B. மெல்லப் பேசினான் — 2. தெரிநிலைப் பெயரெச்சம்
C. படித்துத் தேறினான் — 3. தெரிநிலை வினையெச்சம்
D. நல்ல பையன் — 4. குறிப்பு வினையெச்சம்

|  | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

60. பொருத்துக

A. பொறை — 1. அச்சம்
B. வெருவந்தம் — 2. சுமை
C. ஒல்லை — 3. விரைந்து

|  | A | B | C |
|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 |
| b. | 1 | 2 | 3 |
| c. | 1 | 3 | 2 |
| d. | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

Match the following

A. பொறை — 1. Fear
B. வெருவந்தம் — 2. Burden
C. ஒல்லை — 3. Fastly

|  | A | B | C |
|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 |
| b. | 1 | 2 | 3 |
| c. | 1 | 3 | 2 |
| d. | 2 | 3 | 1 |

e. Answer not known

61. வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே - இவ்விலக்கண வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

a. நன்னூல் b. தண்டியலங்காரம் c. தொல்காப்பியம்
d. வீரச்சோழியம் e. விடை தெரியவில்லை

62. பொருத்துக:

A. வாழ்த்துதல் — 1. செல்க
B. வைதல் — 2. வாழ்க
C. விதித்தல் — 3. ஈக
D. வேண்டுதல் — 4. ஒழிக

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

63. பொருந்தாத ஓசை உடைய சொல் ___________.

a. பாய்கையால் b. மேன்மையால் c. திரும்புகையில்

d. அடிக்கையால் e. விடை தெரியவில்லை

64. பொருத்துக:

A. கலம்பக உறுப்புகள் 1. கo

B. உயிரெழுத்துகள் 2. கஅ

C. பகுபத உறுப்புகள் 3. கஉ

D. சார்பெழுத்துகள் 4. கூ

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

65. பொருத்துக:

A. இயற்சொல் 1. சமற்கிருத சொற்கள்

B. திரிசொல் 2. எல்லோருக்கும் விளங்குவது

C. வடசொல் 3. கற்றோர்க்கு மட்டும் விளங்குவது

D. திசைச்சொல் 4. பிறபகுதிகளிலிருந்து தமிழில் வழங்குவது

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

66. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ____________.

a. மார்பு b. கழுத்து c. தலை d. மூக்கு e. விடை தெரியவில்லை

67. “ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு
வகுப்பது பரணி” - இங்கு ‘அமர்’ என்பதன் பொருள் என்ன?

a. வெற்றி b. தேவர் c. போர் d. அரசர் e. விடை தெரியவில்லை

68. சந்திப்பிழையற்ற தொடரைக் கண்டறிக.

a. கவிஞர் சங்கதமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்கு கூறினார்

b. கவிஞர் சங்கத்தமிழ் நூலை படிக்குமாறு தம்பிக்குக் கூறினார்

c. கவிஞர் சங்கத்தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார்

d. கவிஞர் சங்கதமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார்

e. விடை தெரியவில்லை

69. பின்வருவனவற்றுள் தமிழ்மொழிச்சொல் எது?

I. சன்னல் II. நிலுவை III. காகிதம் IV. மாலுமி

a. I b. எதுவுமில்லை c. II d. III e. விடை தெரியவில்லை

70. முன்னமே தக்கவாறு அரண் செய்து கொள்ளாத அரசன் போர் வந்த காலத்தில் அஞ்சி விரைவில் அழிவான் என்பதை கூறும் குறள் எது?

a. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுங்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்

b. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கம் அரம்

c. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகும் திரு

d. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்

e. விடை தெரியவில்லை

Choose the kural for the following meaning

The king who has not provided himself with a place of defence, will in times of war be seized with fear and quickly perish.

a. The tyrant, harsh in speach and hard of eye,
His ample joy, swift fading, soon shall die.

b. Harsh words and punishments severe beyond the right,
Are file that wears away the monarch's conquering might.

c. Who leaves the work to those around, and thinks of it no more;
If he in wrathful mood reprove, his prosperous days are o'er!.

d. Who builds no fort whence he may foe defy,
In time of war shall fear and swiftly die.

e. Answer not known

71. பொருத்துக:

A. நடந்து — 1. முற்றெச்சம்
B. பேசிய — 2. குறிப்புப் பெயரெச்சம்
C. எடுத்தனன் உண்டான் — 3. பெயரெச்சம்
D. பெரிய — 4. வினையெச்சம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 2 | 3 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 3 | 2 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

72. உயிரளபெடையில் அளபெடுக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

a. 5 b. 7 c. 3 d. 9 e. விடை தெரியவில்லை

73. பொருத்துக:

A. குடிதழீஇ — 1. செய்யுளிசை அளபெடை
B. உழாஅர் — 2. ஒற்றளபெடை
C. உடுப்பதூஉம் — 3. இன்னிசை அளபெடை
D. அரங்ங்கம் — 4. சொல்லிசை அளபெடை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

74. பொருத்துக:

A. மூன்றாம் வேற்றுமை — 1. இராமனுக்குத் தம்பி இலக்குவன்
B. நான்காம் வேற்றுமை — 2. பாரியினது தேர்
C. ஐந்தாம் வேற்றுமை — 3. மண்ணால் குதிரை செய்தான்
D. ஆறாம் வேற்றுமை — 4. ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

A B C D

| | | | | |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

75. பொருத்துக:

A. ஆவி — 1. மாத்திரை
B. அளபு — 2. மார்பு
C. மிடறு — 3. உயிரெழுத்து
D. உரம் — 4. கழுத்து

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 3 | 1 | 2 | 4 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

76. பொருத்துக:

A. பொருட்பெயர் — 1. நாள், ஆண்டு
B. இடப்பெயர் — 2. வெண்மை, வட்டம்
C. காலப்பெயர் — 3. சென்னை, தஞ்சை
D. பண்புப்பெயர் — 4. புத்தகம், பசு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

77. பொருத்துக:

A. செய்தான் — 1. தொடர்மொழி
B. படம் பார்த்தான் — 2. தனிமொழி
C. வேங்கை — 3. பொதுமொழி
D. முக்கனி — 4. தொகைச்சொல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

78. பொருத்துக:

A. பெயரெச்சத்தொடர் — 1. கார்குழலி படித்தாள்
B. வினையெச்சத்தொடர் — 2. புலவரே வருக
C. வினைமுற்றுத்தொடர் — 3. பாடி முடித்தான்
D. எழுவாய்த் தொடர் — 4. எழுதிய பாடல்
E. விளித்தொடர் — 5. வென்றான் சோழன்

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 5 | 3 |
| b. | 1 | 5 | 4 | 2 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 | 5 |
| d. | 4 | 3 | 5 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

79. இலக்கணக் குறிப்பறிக. அடவிமலையாறு

a. உவமைத்தொகை    b. உம்மைத்தொகை    c. எண்ணும்மை



APOLLO STUDY CENTRE

d. பண்புத்தொகை e. விடை தெரியவில்லை

80. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் _______
போய்கண் டன்னது உடைத்து
a. பெருஞானம் b. பெருஞ்செல்வம் c. உலகம்
d. வேந்தன் e. விடை தெரியவில்லை
Whom subjects scarce may see, of harsh forbidding countenance;
His ________ shall waste, blasted by demon's glance.
a. greater wisdom b. ample wealth c. World
d. King e. Answer not known

81. வளையல் என்னும் பெயர்
a. காரணப் பெயர் b. இடுகுறி சிறப்புப் பெயர் c. காரணப் பொதுப் பெயர்
d. காரண சிறப்புப் பெயர் e. விடை தெரியவில்லை

82. இலக்கணக் குறிப்பறிக. நீங்காமை
a. எதிர்மறைத் தொழிற்பெயர் b. எதிர்மறை வினையெச்சம் c. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
d. குறிப்பு வினைமுற்று e. விடை தெரியவில்லை

83. மல்லல் மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
a. மறுமை b. பூவரசு மரம் c. வளம் d. பெரிய e. விடை தெரியவில்லை

84. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான மரபுச் சொல்லைக் கண்டறிக.

a. மான்குட்டி
யானைக்குட்டி
சிங்கக்குட்டி
புலிக்குட்டி

b. மான்கன்று
யானைகன்று
சிங்கக்குட்டி
புலிப்பறழ்

c. மான்கன்று
யானைக்கன்று
சிங்கக் குருளை
புலிக்குட்டி

d. மான்கன்று
யானைகன்று
சிங்கக் குருளை
புலிப்பறழ்

e. விடை தெரியவில்லை

85. பின்வருவனவற்றுள் வினைத்தொகை அல்லாதது எது / எவை?
i. ஆடுகொடி ii. இன்சுவை iii. அலைகடல் iv. மல்லிகைப்பூ
a. iv மட்டும் b. ii மற்றும் iv மட்டும் c. iii மட்டும்
d. i மற்றும் iii மட்டும் e. விடை தெரியவில்லை

86. மலரின் எழுவகைப் பருவங்களின் சரியான வரிசையைக் கண்டறிக.
a. மொட்டு, முகை, அரும்பு, மலர், வீ, அலர், செம்மல்
b. அரும்பு, முகை, மொட்டு, மலர், அலர், வீ, செம்மல்
c. அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்
d. மொட்டு, அரும்பு, முகை, மலர், அலர், வீ, செம்மல
e. விடை தெரியவில்லை

87. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்.
a. திசைச்சொற்கள் b. வடசொற்கள் c. உரிச்சொற்கள்
d. தொகைச்சொற்கள் e. விடை தெரியவில்லை

88. கட்கநேத்ரி என்ற சொல்லிற்கான தமிழ்ச் சொல்
a. வாள்நெடுங்கண்ணி b. நீள் நெடுங்கண்ணி c. அங்கயற்கண்ணி
d. அறம்வளர்த்தாள் e. விடை தெரியவில்லை

89. மருதத் திணைக்குரிய உரிப்பொருள்
a. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
b. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
c. ஊடலும் ஊடல் நிமித்தமும்
d. பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
e. விடை தெரியவில்லை

90. செய்த குற்றத்தை தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அக்குற்றம் செய்யாதபடி குற்றத்திற்குப் பொருந்துமாறு தண்டிப்பவனே அரசன் ஆவான் என்பதை உணர்த்தும் குறள் எது?
a. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து
b. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்
c. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்
d. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்
e. விடை தெரியவில்லை

Choose the kural for the following meaning
He is a king who having equitably examined (any injustice which has been brought to his notice), suitably punishes it, so that it may not be again committed.
a. Who punishes, investigation made in due degree,
So as to stay advance of crime, a king is he.
b. For length of days with still increasing joys on Heav'n who call,
Should raise the rod with brow severe, but let it gently fall.
c. Where subjects dread of cruel wrongs endure,
Ruin to unjust king is swift and sure.
d. 'Ah! cruel is our king', where subjects sadly say,
His age shall dwindle, swift his joy of life decay.
e. Answer not known

91. ‘டெலஸ்கோப்’ என்பதன் தமிழ்ச்சொல்
a. நுண்ணோக்கி
b. தொலைநோக்கி
c. வெப்பமானி
d. உருப்பெருக்கி
e. விடை தெரியவில்லை

92. ஞால் என்னும் சொல்லின் பொருள்
a. தொங்குதல்
b. தொடங்குதல்
c. தொழுதல்
d. துளங்குதல்
e. விடை தெரியவில்லை

93. செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது
a. விற்பூட்டுப்பொருள்கோள்
b. தாப்பிசைப்பொருள்கோள்
c. மொழிமாற்றுப்பொருள்கோள்
d. நிரல்நிறைப் பொருள்கோள்
e. விடை தெரியவில்லை

94. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணம் யாது?
a. பெயரெச்சம், உவமைத்தொகை
b. எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
c. வினையெச்சம், உவமை
d. எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
e. விடை தெரியவில்லை

95. பின்வருவனவற்றுள் நிரையசை அல்லாதது எது?
a. குறில் இணைந்து வரல்
b. குறில் இணைந்து ஒற்றுடன் வரல்
c. நெடில் ஒற்றுடன் வரல்
d. குறில் நெடில் இணைந்து வரல்
e. விடை தெரியவில்லை

96. பொருத்துக:

| | |
|---|---|
| A. கண்ணகி வந்தான் | 1. திணைவழு |
| B. என் மாமா வந்தது | 2. இடவழு |
| C. கரிகாலன் நாளை வந்தான் | 3. காலவழு |
| D. நாங்கள் வந்தார்கள் | 4. பால்வழு |

APOLLO STUDY CENTRE

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 1 | 4 | 3 | 2 |

e. விடை தெரியவில்லை

97. "யா" மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?
a. குறிஞ்சி b. மருதம் c. பாலை d. நெய்தல் e. விடை தெரியவில்லை

98. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது
a. வழாநிலை b. வழுவமைதி c. வினாவழு
d. விடைவழு e. விடை தெரியவில்லை

99. பின்வருவனவற்றுள் தவறாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறிக.
a. செறு – வயல் b. வள்ளை – நெல்குத்தும்போது பெண்கள் பாடும் பாட்டு
c. பரிந்து – வெறுத்து d. புரை – குற்றம்
e. விடை தெரியவில்லை

100. இறைக்கடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்
என்ற குறளில் "இறைக்கடியவன்" என்பதன் பொருள் யாது?
a. இறைவனுக்கு அடியன் b. வேந்தனுக்கு அடியன் c. அரசன் கொடியவன்
d. மன்னன் மேன்மை பொருந்தியவன் e. விடை தெரியவில்லை
iRaikatiyan endruraikkum innaachchol vaendhan
uRaikatuki ollaik kedum
In this Kural the term iRaikatiyan means
a. slave to god b. slave to king c. merciless king
d. benevolent king e. Answer not known

101. 'கோட்டுகிர் குருளை' என்றழைக்கப்படுவது
a. சிங்கக்குட்டி b. புலிக்குட்டி c. கரடிக்குட்டி
d. குரங்குக்குட்டி e. விடை தெரியவில்லை

102. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
a. உருவகம், எதுகை b. மோனை, எதுகை c. முரண், இயைபு
d. உவமை, எதுகை e. விடை தெரியவில்லை

103. பொருத்துக
A. வினைத்தொகை 1. நாலிரண்டு
B. உவமைத்தொகை 2. செய்தொழில்
C. உம்மைத்தொகை 3. பவள வாய்
D. அன்மொழித்தொகை 4. மதிமுகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

104. மரபுப் பிழையற்ற வாக்கியம் எது?
a. மயில் கூவியது; குயில் அகவியது b. குயில் கூவியது; மயில் முழங்கியது
c. குயில் கத்தியது; மயில் அகவியது d. குயில் கூவியது; மயில் அகவியது
e. விடை தெரியவில்லை

105. பொருத்துக:

A. க.·.·.சு 1. இன்னிசையளபெடை
B. உழா அர் 2. ஒற்றளபெடை
C. உண்பதுஉம் 3. சொல்லிசையளபெடை
D. உரனசைஇ 4. செய்யுளிசையளபெடை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

106. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் __________.
a. அகவற்பா b. வெண்பா c. வஞ்சிப்பா d. கலிப்பா e. விடை தெரியவில்லை

107. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்

| | வாழை | வாளை | வாலை |
|---|---|---|---|
| a. | செடி | மரம் | பூப்பருவம் |
| b. | கன்று | மரம் | இளம்பெண் |
| c. | மரம் | மீன் | இளம்பெண் |
| d. | மரம் | செடி | பூப்பருவம் |

e. விடை தெரியவில்லை

108. தொழா அர் - இலக்கணக் குறிப்பு காண்க:
a. இன்னிசை அளபெடை b. செய்யுளிசை அளபெடை c. சொல்லிசை அளபெடை
d. ஒற்றளபெடை e. விடை தெரியவில்லை

109. பொருளறிந்து பொருத்துக:
A. அறிமின் 1. கூற்றம்
B. அஞ்சுமின் 2. அறநெறி
C. பொறுமின் 3. பெரியார் வாய்ச்சொல்
D. பெறுமின் 4. கடுஞ்சொல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

110. __________ என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று
a. மனந்தூய்மை b. கண்ணோட்டம் c. மனநலம்
d. நாநலம் e. விடை தெரியவில்லை
A ______________ the right is greatest gain,
It stands alone midst goodly things that men obtain.
a. purity of heart b. benignity c. mental health
d. tongue that rightly speaks e. Answer not known

111. இரவு என்பதனைக் குறிக்கும் இரு சொல் இணையைத் தேர்ந்தெடுக்க.
a. கங்குல், பகல் b. நிதி, பகல் c. கங்குல், அல்
d. அல், பகல e. விடை தெரியவில்லை

112. ஒலி வேறுபாட்டிற்கேற்ப சரியான பொருளறிக:

| ஒலி | ஒழி | ஒளி |
|---|---|---|
| a. நாதம் | தவிர் | பெருக்குதல் |
| b. ஓசை | கடல் | கண்மணி |
| c. காது | நீக்கு | காந்தி |
| d. நாதம் | தவிர் | விளக்கு |

e. விடை தெரியவில்லை

113. வழூஉ இல்லாத சொல் தேர்க:
a. முந்தாணி b. முந்தாணை c. முன்றானை
d. முன்தாணி e. விடை தெரியவில்லை

114. கீழ்கண்டவற்றுள் எது பிறமொழிச்சொல்.
a. காகிதம் b. இயல்பு c. தொடக்கம்
d. மணிமுடி e. விடை தெரியவில்லை

115. "டிரான்ஸ்லேசியோ" (Translatio) என்னும் சொல் இடம்பெற்றுள்ள மொழி
a. தமிழ் b. இலத்தீன் c. ஆங்கிலம் d. பிரெஞ்சு e. விடை தெரியவில்லை

116. எண்சுவைகளில் தவறானது எது?
a. இளிவரல் b. மருட்கை c. அல்லல்
d. உவகை e. விடை தெரியவில்லை

117. கீழ்கண்டவற்றில் திசைச்சொல்லில் எது தவறானது?
a. வேடிக்கை b. அச்சன் c. வினவினான்
d. ஜமக்காளம் e. விடை தெரியவில்லை

118. சரியான மொழிபெயர்ப்புத் தொடரைத் தேர்ந்தெடுக்க.
a. Where do you stand in your family? – நீ உன் குடும்பத்தில் எங்கே நிற்கிறாய்?
b. He is a man – அவன் ஒரு மனிதனாக இருக்கிறான்
c. Please lend me your ears - அருள் கூர்ந்து உங்கள் செவிகளைக் கொடுங்கள்
d. The Professor teaches Tamil - பேராசிரியர் தமிழ் கற்பிக்கிறார்
e. விடை தெரியவில்லை

119. கீழ்கண்டவற்றுள் எது தமிழ்ச்சொல் அல்ல?
a. காசு b. தளை c. முதல் d. பதில் e. விடை தெரியவில்லை

120. சொல்வன்மையைவிடச் சிறந்த ____________ இல்லை
a. அறமும் b. பொருளும் c. வீடும்
d. a மற்றும் b e. விடை தெரியவில்லை
Make your speech; for superior to it, there is neither virtue _______
a. virtue b. wealth c. heaven
d. a and b e. Answer not known

121. 'கௌ' என்பதின் ஓரெழுத்து ஒருமொழி சொல்லில் தவறானது எது?
a. தீங்கு b. ரகம் c. கொள்ளு
d. மனத்தாங்கல் e. விடை தெரியவில்லை

122. கலிப்பாவின் பொது இலக்கணத்தின் தவறானது.
a. துள்ளலோசை கொண்டது b. 12 அடி வரை வரும்
c. கலித்தளைவரும், பிற தளைகளும் வரும் d. அடி வரையறை இல்லை
e. விடை தெரியவில்லை

123. சரியாகப் பொருந்தியுள்ள விடைக்குறிப்பைத் தேர்க.

| | |
|---|---|
| A. பகுப்பாய்வு | 1. Image |
| B. படிமம் | 2. Efficiency |
| C. வினைத்திறன் | 3. Idioms |
| D. மரபுத்தொடர்கள் | 4. Analysis |

A B C D

| | | | | |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

124. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க
a. கோள், தோள், பால், வாள், வேல்
b. பால், கோல், வேல், வாள், தோள்
c. வேல், பால், கோல், தோல், வாள்
d. கோல், தோள், வேல், பால், வாள்
e. விடை தெரியவில்லை

125. தவறான இணையைக் காண்க
a. வட்கார் மேல் செல்வது - வஞ்சி
b. எயில் வளைத்தல் - உழிஞை
c. அதிரப் பொருவது - வாகை
d. நிரை மீட்டல் - கரந்தை
e. விடை தெரியவில்லை -

126. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி ___________
a. உவமை b. தற்குறிப்பேற்றம் c. உருவகம்
d. தீவகம் e. விடை தெரியவில்லை

127. பொருத்துக:
A. இணையக்குற்றம் 1. Skype
B. இடைமுகச் செயலி 2. WIFI
C. இசுகை 3. Interface Tool
D. அருகலை 4. Cyber Crime

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 3 | 4 | 2 |

128. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது _______
a. தீவக அணி b. உவமையணி c. தற்குறிப்பேற்ற அணி
c. உருவக அணி e. விடை தெரியவில்லை

129. தீவகம் என்னும் சொல்லின் பொருள் __________
a. விளக்கு b. தீவு c. விலக்கு d. விலங்கு d. விடை தெரியவில்லை

130. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்
என்ற குறளில் வரும் "வேட்பு" என்ற சொல்லின் பொருள் என்ன?
a. விருப்பம் b. பொய் c. மெய்
d. ஞானம் e. விடை தெரியவில்லை
vaetpaththaanhj chollip piRarsol payan-koatal
maatchiyin maasatraar koaL
In this Kural the term Vaetpu means
a. desire b. untruth c. truth
d. knowledge e. Answer not known

131. கோட்டைமதில் கொடிகள் அசைந்தன, அவை கண்ணகி – கோவலரை வரவேண்டா எனக் கூறுவன போல் இருந்தன. கோட்டைமதில் இருந்த ஊர் _________
a. வஞ்சி b. பூம்புகார் c. உறையூர்
d. மதுரை e. விடை தெரியவில்லை

132. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| A. எழுத்துரு | | 1. உள்ளீட்டுக்கருவி | |
| B. குறியேற்றம் | | 2. மென்தமிழ் | |
| C. விசைப்பலகை | | 3. எழுத்து வரிவடிவம் | |
| D. தமிழ்ச் சொற்செயலி | | 4. எண்ம மதிப்பு | |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

133. செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல், அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்திப் பொருளை விளக்குதல் ___________

a. நிரல் நிறையணி b. சொற்பொருள் பின்வரு நிலை அணி c. உவமையணி
d. தீவக அணி e. விடை தெரியவில்லை

134. சொல்லையும் பொருளையும் வரிசையாய் நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது _________ அணியாகும்.

a. தற்குறிப்பேற்றம் b. உவமை c. நிரல்நிறை
d. தீவகம் e. விடை தெரியவில்லை

135. ‘இஸ்மத் சன்னியாசி’ என்பது _______

a. இந்தி மொழி b. உருது மொழி c. அரேபிய மொழி
d. பாரசீக மொழி e. விடை தெரியவில்லை

136. பாயிரம் இல்லது _____________ அன்றே.

a. காவியம் b. பனுவல் c. பாடல் d. கவிதை e. விடை தெரியவில்லை

137. தூங்கலோசை, துள்ளல் ஓசை பெறும் பாவினங்கள் ___________

a. ஆசிரியப்பா, வெண்பா b. வஞ்சிப்பா, கலிப்பா c. கலிப்பா, வஞ்சிப்பா
d. வெண்பா, வஞ்சிப்பா e. விடை தெரியவில்லை

138. சாளரம் என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் __________

a. காலதர் b. உலகம் c. துறவு
d. இவை ஏதுமில்லை d. விடை தெரியவில்லை

139. பொருத்துக

| | |
|---|---|
| A. காழியர் | 1. அப்ப வணிகர் |
| B. கூவியர் | 2. எண்ணெய் வணிகர் |
| C. ஓசுநர் | 3. தானியம் |
| D. கூலம் | 4. பிட்டு வணிகர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

140. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்
என்ற குறளில் வரும் “ஞாலம்” என்ற சொல்லின் பொருள் என்ன?

a. ஞானம் b. வையகம் c. நாநலம்
d. இவை ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

viraindhu thozhilkaetkum Gnaalam nirandhinidhu
solludhal vallaarp peRin
In this Kural the term Gnaalam means

a. knowledge b. World c. right speech

d. none of these e. Answer not known

141. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

A. விரியன் 1. தண்டை
B. திருகுமுருகு 2. காலாழி
C. நாங்கூழ்ப்புழு 3. சிலம்பு
D. குண்டலப்பூச்சி 4. பாடகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 4 | 1 | 3 | 2 |

e. விடை தெரியவில்லை

142. பொருத்துக

A. யானையே 1. அரற்றுவன
B. வடிமணிச்சிலம்பே 2. கலக்குண்பன
C. செல்லோடையே 3. மருளுடையன
D. வருபுனலே 4. பிணிப்புண்பன
E. இளமான்களே 5. சிறைப்படுவன

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 | 5 |
| b. | 4 | 1 | 2 | 5 | 3 |
| c. | 5 | 4 | 3 | 4 | 2 |
| d. | 1 | 2 | 4 | 3 | 5 |

e. விடை தெரியவில்லை

143. பொருத்துக

A. தால் 1. மிக்க அழகு
B. உழுவை 2. பாடுதல்
C. அகவுதல் 3. தாலாட்டு
D. ஏந்தெழில் 4. சமீபம்
E. அணிமை 5. ஒருவகை மீன்

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 5 | 1 | 2 | 4 |
| b. | 3 | 4 | 2 | 1 | 5 |
| c. | 3 | 5 | 2 | 1 | 4 |
| d. | 5 | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

144. பொருத்துக

அணி உறுப்பு
A. சிலம்பு 1. கொண்டை
B. சுட்டி 2. காது
C. குழை 3. தாள்
D. சூழி 4. நெற்றி
5. மார்பு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 5 | 4 | 2 | 3 |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

145. “ஜனப்பிரளயம்“ என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

a. மக்ககள் அலை b. உயிர் அலை c. மக்கள் வெள்ளம்

d. மக்கள் அவை e. விடை தெரியவில்லை

146. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
a. காவலாளி b. மேலாளர் c. உதவியாள் d. ஆசிரியர் e. விடை தெரியவில்லை

147. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?
a. வாய்க்கால் b. நாங்கூழ் c. நடராசன் d. புல் e. விடை தெரியவில்லை

148. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
a. அடிமோனை, அடி எதுகை b. சீர்மோனை, சீர்எதுகை c. அடிஎதுகை, சீர்மோனை
d. சீர்எதுகை, அடிமோனை e. விடை தெரியவில்லை

149. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே.
அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ________
a. நன்னூல் b. அகத்தியம் c. தொல்காப்பியம்
d. இலக்கண விளக்கம் e. விடை தெரியவில்லை

150. தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்த போதிலும் _________ மலரைப் போன்றவர்
a. நிறமில்லா b. அழகில்லா c. மணமில்லா
d. தேனில்லா e. விடை தெரியவில்லை
Those who are unable to set forth their acquirements (before others) are like flowers blossoming in a cluster and yet _______
a. without colour b. without beauty c. without fragrance
d. without honey e. Answer not known

APOLLO STUDY CENTRE

# GEAR UP SERIES

## TEST XIII – GENERAL TAMIL – GRAMMAR

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **C** | **D** | **C** | **B** | **A** | **B** | **B** | **C** | **A** | **C** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **D** | **A** | **A** | **A** | **D** | **B** | **B** | **A** | **D** | **B** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **C** | **D** | **C** | **B** | **A** | **C** | **D** | **A** | **A** | **D** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **B** | **D** | **D** | **C** | **B** | **B** | **C** | **A** | **C** | **B** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **B** | **D** | **C** | **B** | **D** | **C** | **D** | **B** | **D** | **C** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **C** | **D** | **D** | **D** | **D** | **C** | **A** | **B** | **B** | **A** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **C** | **D** | **C** | **B** | **C** | **C** | **C** | **C** | **C** | **D** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **C** | **B** | **B** | **D** | **A** | **A** | **D** | **D** | **B** | **B** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **D** | **A** | **C** | **D** | **B** | **C** | **D** | **A** | **C** | **A** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **B** | **A** | **D** | **D** | **C** | **C** | **C** | **B** | **C** | **C** |
| 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 | 109 | 110 |
| **B** | **B** | **D** | **D** | **B** | **A** | **C** | **B** | **A** | **D** |
| 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| **C** | **D** | **B** | **A** | **B** | **C** | **C** | **D** | **D** | **D** |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 |
| **B** | **B** | **B** | **D** | **C** | **C** | **A** | **C** | **A** | **A** |
| 131 | 132 | 133 | 134 | 135 | 136 | 137 | 138 | 139 | 140 |
| **D** | **B** | **D** | **C** | **D** | **B** | **B** | **A** | **D** | **B** |
| 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 |
| **B** | **B** | **C** | **A** | **C** | **D** | **C** | **C** | **C** | **C** |